*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய*www.iaraindia.com
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# திருக்குறளும் வாழ்வியல் வழிமுறைகளும்

**முனைவர் சு. திரிவேணி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை
அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

**முகவுரை :**

“முன்னைப் பழமைக்கும் பழமையாய்
பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்”

என்று சுட்டப்படும் இறைத்தன்மைகளைத் தனக்குள் பொதிந்து, உலகப்பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறள், நிலம், காலம் என்ற எல்லைகளைக் கடந்த பொதுமைப் பண்புடையதாகத் திகழ்கிறது. பழந்தமிழ் இலக்கியமான திருக்குறள், அண்மைக்கால மனித வாழ்க்கைக்கும் மக்களுக்கும் ஏற்றதாக, நெகிழ்வுத் தன்மை கொண்டதாக விளங்குகிறது. தனிமனிதர்களுக்கும் சமூகத்திற்கும் பொருந்தும் அறக்கருத்துக்களையும் மக்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்கேற்ற வழிமுறைகளையும் வள்ளுவர் முறைப்படுத்திக் கூறுகிறார்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திருக்குறள், அற இலக்கியம் என்ற தன்மைக்கு அப்பாற்பட்டதாக, மனித மனம், மனதில் எனும் உணர்வுகள், மக்கள் வாழும் மற்றும் வாழ வேண்டிய விதம் என்ற பல கூறுகளையும் ஆராய்ந்து எடுத்துக்காட்டுகிறது. மனித வாழ்வுக்குத் தேவை அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பரிமாணங்கள் என்று தெரிவிக்கிறது.

சங்கத்தமிழர் அகம், புறம் என வாழ்வை இரண்டாகப் பிரித்தனர். அகமாயினும் புறமாயினும் அறம், பொருள், இன்பம் ஆகியவை பொதுவாகும்.

**அகவாழ்வியல் :**

★ அறம் - களவு மற்றும் கற்பில் உண்மை, சொல் தவறாமை.

★ பொருள் - கையுறை, இல்லறத்துக்குத் தேவையான கூறுகளில் ஒன்று.

★ இன்பம் - காதல் இன்பம்

**புறவாழ்வியல் :**

★ அறம் - கல்வி, வீரம், வாய்மை உள்ளிட்ட நற்பண்புகள்

★ பொருள் - கொடை

★ இன்பம் - அறம், பொருளால் ஏற்படும் மகிழ்ச்சி

எனவே திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்ற பகுப்பை முன் வைப்பது அகவாழ்விற்கும் புறவாழ்விற்கும் பொதுவாகவும் பொருத்தமாகவும் அமைகிறது. அறச்செயலை அறவழியில் செய்ய வேண்டும் என்பது வள்ளுவர் எண்ணம். செல்லும் வழியும் சேரும் இடமும் சிறப்பிற்குரியதாக இருந்தால் மட்டுமே வாழ்க்கைப் பயணம் போற்றத்தக்கதாக அமையும். எனவேதான்,

"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" (குறள் எண் : 34)

என்ற குறள் மூலம் மனதால் குற்றமற்று இருத்தலே முதன்மையானது என்று குறிப்பிடுகிறார்.

**மனிதன் என்பவன் தெய்வமாகலாம்**

ஒரு சாதாரண மனிதன் குறள் கூறும் கருத்துக்களைப் படிக்கத் தொடங்கும்போது மரியாதைக்குரிய மனிதனாகிறான். அக்குறள் உணர்த்தும் கருத்துகளை உணர்ந்து தன் வாழ்வில் விழுமியக் குறட்பாக்களைக் கையாளும்போது மனித நிலையிலிருந்து தெய்வத்தன்மை பொருந்தியவனாக உயர்கிறான். காரணம், பிறருக்கு உதவி செய்து, தன் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி, பண்பட்ட வாழ்க்கை வாழ்பவனே சிறந்த மனிதன். தன் கடமைகளைப் புறக்கணிக்கும் ஒருவனை அவனுடைய வாழ்க்கையும் இந்த உலகமுமே புறக்கணிக்கிறது. சிறந்த மனிதன் பற்றிக் கூறப் புகுந்த வள்ளுவர்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை" ( குறள் எண் : 43)

என்று ஒருவனை அவனது சக மனிதர்களுக்குள் உயர்ந்தவனாக வாழும் வழியைக் கூறுகிறார். முன்னோர், தெய்வம், விருந்தினர்கள், தன் குடும்பத்தினர் என அனைவரையும் பரிந்தோம்புதலை இல்வாழ்வில் மேம்பட்டமாகக் குறள் எடுத்துரைக்கிறது. மேலும்

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை" (குறள் எண் : 47) என்றும்
"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" (குறள் எண் : 388)

என்றும் கூறி, வீட்டுக்குத் தலைவராக இருந்தாலும் நாட்டுக்குத் தலைவராக இருந்தாலும் தத்தம் கடமைகளைச் சரிவர செய்வோர், தெய்வமாகவோ, தெய்வத்தன்மை பொருந்தியவர்களாகவோ போற்றப்படுவர் என்று வள்ளுவர் உணர்த்துகிறார்.

**வாழ்வியல் இலக்கணம்**

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் கருத்துக்களைச் சுவைபடச் சொல்லும் வகையில் திருக்குறள் ஒரு இலக்கியமாகத் திகழ்கிறது. மொழி இலக்கணம் மட்டுமல்லாமல் வாழ்விலக்கணங்களும் வகுத்துத் தந்த பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் போல, வாழும் நெறிகளை, வாழ்வியல் சட்டங்களைக் கூறும் திறத்தால் திருக்குறள் ஒரு இலக்கண நூலாகவும் பரிமாணம் பெறுகிறது. இவ்வாறு தமிழர் வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியையும் தொட்டுத் துலங்கச் செய்த பெருமைமிக்கது திருக்குறள்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்", (குறள் எண் : 596)
"கான முயலெய்த அன்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது" (குறள் எண் : 772)

எனக் கூறுகையில் திருவள்ளுவர் மனதிற்கு ஊக்கமூட்டும் ஆலோசகராக விளங்குகிறார். சொல்வன்மை, குறிப்பறிதல், இனியவை கூறல் முதலியவற்றால் ஆளுமை மேம்பாட்டுப் பயிற்சியாளராகவும் மருந்து கூறும் மருத்துவராகவும் பலவாறெல்லாம் தோற்றம் பெறும் வள்ளுவரைக் காலத்திற்கு ஏற்ப மக்கள் மனதில் பதிவிக்க வேண்டும்.

**மனித மனங்களைப் பலப்படுத்துதல்**

உலகிற்குத் தேவையான நற்கருத்துக்களை எடுத்துரைத்து அறத்தைப் போதிப்பதோடு நில்லாமல் அந்த நற்கருத்துக்களை வாழ்வில் கடைபிடிக்கும்

மக்களின் மனவலிமையைப் பாதுகாப்பதும் இன்றியமையாதது என்பதை உணர்ந்தவர் வள்ளுவர்.

அறக் கருத்துக்களை எல்லாம் வகைப்படுத்தி, வரிசைப்படுத்திக் கூறியிருந்த வள்ளுவர், மனித மனம் மற்றும் மனித வாழ்வானது தோல்விகளையும் சந்திக்கக்கூடும் என்ற நடைமுறை உண்மையை உணர்ந்தவர். தோல்விகளால் மனிதர்கள் துவண்டு விடக்கூடாது என்று விரும்புகிறார். உள்ளம் திடமாக இருந்தால் எத்தகைய வீழ்ச்சியிலிருந்தும் மீண்டு வர முடியும். உடல் உறுதியோ, பணபலம் மற்றும் படைபலமோ இல்லாமலே கூட மக்கள் தங்கள் வாழ்வில் மீண்டெழ முடியும்.

**மென்மையும் வன்மையும்**

இயற்கையின் படைப்பில் இருந்து நாம் கற்றுக் கொள்ள நிறைய கருத்துக்கள் உள்ளன. நத்தை, ஆமை, மண்புழு ஆகிய மூன்றும் மென்மையான, பஞ்சுப்பொதி போன்ற உடலமைப்பைக் கொண்டவை. இவற்றுள் ஆமை மற்றும் நத்தையின் மென்மையைப் பாதுகாக்க பலமான ஓடு உதவுகிறது. அவ்வாறான இயற்கையின் படைப்பால் அவற்றின் இயக்கம் மிக மெதுவாக அமைகிறது. ஆனால் அவற்றைப் போலவே மென்மையான உடலமைப்புக் கொண்ட மண்புழுவோ, தன்னைப் பாதுகாக்கும் வலிமையான அமைப்பைப் பெற்றிருக்கவில்லை.

மென்மையான மண்புழுக்குப் பாதுகாப்புக்கான அமைப்பு இல்லாத போதிலும் தன் சோதனைகளை சுயமாக எதிர்கொண்டு மீண்டு வரும் தகவமைப்பை இயற்கை அமைத்திருக்கிறது. மண்புழுவை இரண்டாக வெட்டினால் அது இரு வேறு மண்புழுவாகிவிடும். பாதுகாப்பான வாழ்வு தேடி ஓடாமல் தனக்கு வரும் இன்னல்களை மண்புழு எதிர்கொள்கிறது. எத்தகைய துன்பம் வந்தாலும் துவண்டு போய் விழுந்து விடாமல் மீண்டு வருகிறது. தன் துன்பங்களுக்குத் தானே துன்பமாக மாறிவிடுகிறது. இதனை வள்ளுவரின்,

“இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்” (குறள் எண் : 623)

என்ற குறள் கொண்டு உணரலாம்.

மனித வாழ்விலும் இத்தகைய சூழல்களைக் காணலாம். செல்வமும் செல்வாக்கும் மிக்கவர்களாக, சிறு துன்பம் வந்தாலும் உறவுகளால் தாங்கிப் பிடிக்கக்கூடியவர்களாக சிலரது வாழ்க்கை அமைகிறது. மாறாக, தன் வாழ்வைத் தானே சுமக்க வேண்டியவர்களாகச் சிலரது வாழ்க்கை அமைந்துவிடுகிறது. இவ்விரு வகையினரின் வாழ்க்கை நிலையும் அனுபவங்களும் முற்றிலும் வேறானவை. மனிதர்கள் தங்களைப் பிறரோடு ஒப்பிட்டு மனம் குழம்பாமல், மனம் தளராமல் தங்களுடைய வாழ்க்கை மற்றும் வாய்ப்புகளை ஏற்று வாழ்தல் வேண்டும் என்ற கூடுதல் அறிவையும் இந்தக் குறள் உணர்த்துகிறது.

மென்மையானவள், பாதுகாக்கப்பட வேண்டியவள், சிறு துயர் கூடப் பொறுக்க முடியாதவள் எனக் கற்பிக்கப்பட்ட சாதாரணப் பெண், தன் குழந்தைக்காக சராசரி மனிதர்களைத் தாண்டி 57 டெசிபல் அளவு வரை வலியை எப்படித் தாங்குகிறாள், அதிலிருந்து எவ்வாறு மீண்டு வருகிறாள், இதற்கான மன வலிமையை அவளுக்கு யார் தருகிறார்கள் என்ற வினாக்களுக்கு எல்லாம் பதிலாக அமைகிறது,

“அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அ∴தே துணை” (குறள் எண் : 76)

என்ற குறள். இதன் மூலம் பெண்ணின் அன்பு தான் அவளின் வலி தாங்கும் வீரமாக மாறுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

**தன் வலிமையறிதல்**

 ISSN: 2320-3412(P), 2349-1639(O)

இந்த உலகில் எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள், தம் வாழ்வு முடித்துக் கடந்து சென்று இருக்கிறார்கள். அவர்களில் யாரோ ஓரிருவர் மட்டுமே லிங்கனாக, காந்தியாக, மண்டேலாவாக, பாரதியாக, நேதாஜியாக, செக்காவாக உருவெடுக்கிறார்கள். பரந்து விரிந்த இந்த உலகத்தில் எங்கோ ஒரு சிலர் மட்டுமே எப்படி காலத்தின் அடையாளமாக மாறுகிறார்கள், அவர்களுக்கென இயற்கை எதையேனும் சிறப்பாகத் தந்திருந்ததா எனச் சிந்தித்தால் பதிலாக,

“பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்” (குறள் எண் : 599)

என்ற வரிகளை எடுத்தியம்ப முடியும். சாதாரண மனிதர்கள் சாதனையாளர்களாக உருவெடுக்க எல்லோரையும் விட வேகமாகச் செயல்பட வேண்டியதில்லை. மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர்களாக இருக்க வேண்டும். தன் வலிமை எது என்பதைப் புரிந்திருக்க வேண்டும் என்கிறது வள்ளுவம்.

**அக வாழ்வில் அறம்**

”அன்பீனும் ஆர்வ முடைமை அது ஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு” (குறள் எண் : 74)

- என்று அன்பின் மூலமாக ஒருவர் மீதான ஆர்வம் அதிகரித்து, அது நட்பாகப் பரிணாம வளர்ச்சி பெறுவதைத் திருவள்ளுவர் அன்புடைமையில் கூறுகிறார். உறவுகளுக்கு அடிப்படையாக அமைவதும் அமைய வேண்டியதும் அன்பேயாகும். அன்பின் அடிப்படையில் அமையும் உறவுகள் காலத்தாலும் வேறு பல காரணங்களாலும் ஏற்படும் நெருக்கடிகளைத் தாங்கி நிற்கும். கருத்து வேறுபாடுகள், முற்றிய முரண்பாடுகள் என எவ்வித இடர்களையும் அன்பு வெல்லும்.

எந்த நாட்டவராயினும் எந்தக் காலமாயினும் எந்த இனமாயினும் காதல் என்ற உணர்வு வாழ்வில் வருவது இயல்பான ஒன்று. யாரைக் காதலிப்பது என்பது அவரவர் மனதைப் பொறுத்தது. அதில் வள்ளுவர் கருத்திடவில்லை. தொல்காப்பியத்தில் அதற்கான வரையறை, வரைமுறை இருந்தது என்பதை இங்கு நினைவுகூர்க. மாறாக வள்ளுவர் எப்படிக் காதலிப்பது என்பதில் சிந்தனையைச் செலுத்துகிறார்.

“செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை” (குறள் எண் : 1151)

என்று காதல் என்பது உயிர்க் காற்றுப் போல இருக்க வேண்டும் என்று காட்டுகிறார். அன்பு செலுத்துவது, ஆளுமை செய்வது என்ற இரண்டையும் ஏற்றுக் கொள்வதே காதல். அங்கே வேறுபாடுகளுக்கோ, நடைமுறைச் சித்தாந்தங்களுக்கோ இடமில்லை.

இலாப நோக்கங்களைக் கருத்தில் கொள்ளாமல் அன்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்படும் குடும்பங்களே தமிழர் வாழ்வின் மிகப்பெரிய பலமாக இருந்துள்ளன. வணிக நோக்கோடு மணம் பேசத் தொடங்கியதே குடும்பக் கட்டமைப்புச் சிதைய அடிப்படையாக இருந்துள்ளது என்பதையும் உணர முடிகிறது. மக்கள் அறிவு, தொழில், செல்வ நிலைகளில் எந்த உயர்வில் இருந்தாலும் குடும்பத்தில் அதைக் கொண்டு அவர்களை எடைபோடக் கூடாது, குடும்பத்திற்கு அடிப்படையாகவும் அளவுகோலாகவும் அமைய வேண்டுவது அன்பு மட்டுமே என்பதை வாழ்க்கைத் துணைநலம், இல்வாழ்தல் மற்றும் இன்பவியலின் மூலமாகத் திருக்குறள் எடுத்தியம்புகிறது.

இவ்வாறாகத் திருக்குறள் வழியாக அக வாழ்விலும் புற வாழ்விலும் மனிதர்கள் தாங்களும் தங்களால் சமூகமும் மேன்மையடையக் கூடிய நல்ல வாழ்க்கை வாழ்வதற்கான வழிமுறைகளை அறியலாம்.

**நிறைவுரை**

வள்ளுவத்தின் வழிகளைக் கையாண்டால் நேர, தூர எல்லைகளைக் கடந்து மனிதர்களும் இறவாப் புகழ்பெற்றவர்களாக, உயர்வாழ்வை அடையலாம். அதற்கேற்ற குறட்பாக்கள் மனித மன, உணர்வு, செயல்களுக்கேற்ப வகைப்படுத்தப்பட்டுக் கூறப்பட்டுள்ளன. உலகப் பொதுமறையாகிய திருக்குறளை நில, நாடு, சமய, மொழி எல்லைகளுக்குள் அடக்கிவிடாமல் மனித இனத்திற்கான பொது நூலாக ஏற்றுக் கொண்டு திருவள்ளுவர் கூறும் அறச்சிந்தனைகளை நடைமுறைப்படுத்துவது காலத் தேவையும் காலத்தின் கட்டாயமுமாகும்.

**துணைநின்ற நூல்கள் :**

1. திருக்குறள் - பரிமேலழகர் உரை
2. திருக்குறள் - தெளிவுரை, வ.சுப.மாணிக்கம்
3. எண்ணங்கள் - டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி
4. வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் மு.பாக்கியமேரி
5. வெற்றி நிச்சயம் - சுகி சிவம்
6. பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும் - சாமி. சிதம்பரனார்